
**நவம்பர் – 10**

# TNPSC துளிகள்

- 2024 ஆம் ஆண்டிற்கான கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி தமிழ் விருதை சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் பணியாற்றிய தமிழறிஞர் மா செல்வராசன் பெற உள்ளார்.
- இந்திய-பூடான் எல்லையில் அசாம் மாநிலத்தின் தமுல்பூர் மாவட்டத்தில் உள்ள நிலம் சார் துறைமுகமான தர்ரங்காவில் அமைக்கப்பட்டுள்ள குடியேற்றப் பரிசோதனைச் சாவடியானது (ICP) சமீபத்தில் திறக்கப்பட்டது.
- ஒன்றிய விளையாட்டுத் துறை அமைச்சகம் ஆனது, விளையாட்டுத் துறை விருதுகளை மறுசீரமைப்பதற்காக வாழ்நாள் சாதனையாளர்களுக்கான தியான் சந்த் விருதிற்குப் பதிலாக வாழ்நாள் சாதனையாளர்களுக்கான அர்ஜுனா விருதினை மாற்றியுள்ளது.
- 2036 ஆம் ஆண்டு ஒலிம்பிக் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான ஒப்பந்தப் புள்ளியை இந்தியா அதிகாரப்பூர்வமாகச் சமர்ப்பித்துள்ளது.
- தெலுங்கானா மாநில அரசானது, மாநிலம் முழுவதும் உள்ள பல்வேறு சமூகங்களின் சமூக, பொருளாதார, கல்வி, மற்றும் அரசியல் நிலைமைகள் பற்றிய பல தரவுகளை மதிப்பிடுவதற்காக என்று மாநிலம் தழுவிய சாதிவாரிக் கணக்கெடுப்பைத் தொடங்கி உள்ளது.
- பேராசிரியர் ஸ்ரீராம் சௌலியா 'Friends – India's Closest Strategic Partners' என்ற தனது புத்தகத்தினைச் சமீபத்தில் வெளியிட்டுள்ளார்.
- சீனாவின் ஜிங்ஷான் என்னுமிடத்தில் நடைபெற்ற உலக சாப்ட் டென்னிஸ் சாம்பியன் ஷிப் போட்டியில் இந்தியாவின் தனுஸ்ரீ பாண்டே வெள்ளிப் பதக்கம் வென்று உள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## 'இன்னுயிர் காப்போம்' திட்டத்தின் கீழான நிதியுதவி அதிகரிப்பு




- தமிழக அரசானது, 'இன்னுயிர் காப்போம்-நம்மை காக்கும் 48' திட்டத்தின் கீழ் வழங்கப் படும் நிதியுதவியை 1 லட்சம் ரூபாயில் இருந்து 2 லட்சம் ரூபாயாக விரைவில் உயர்த்த

உள்ளது.

- இது சாலை விபத்துக்களில் காயம்பட்டவர்களுக்கு முதல் 48 மணிநேரத்திற்கு வழங்கப் படும் சிகிச்சைக்கு நிதியுதவி அளிக்கும் திட்டமாகும்.
- இதுவரை மூன்று இலட்சம் பயனாளிகளுக்கு இத்திட்டம் பயனளித்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட்ட 'இன்னுயிர் காப்போம்-நம்மை காக்கும் 48' திட்டத்திற்காக அரசாங்கம் இதுவரையில் 261.46 கோடி ரூபாய் செலவிட்டு உள்ளது.

# தேசியச் செய்திகள்

## ஜல் உத்சவ் 2024





- நிதி ஆயோக் அமைப்பானது 15 நாட்கள் அளவிலான 'ஜல் உத்சவ்' பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- நீர் மேலாண்மை, பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை குறித்த விழிப்புணர்வு மற்றும் உணர்திறனை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது வீடுகளில் முறையான நீர்ப் பயன்பாடு மற்றும் பயன்பாட்டு சார் அமைப்புகள் மற்றும் முகமைகளில் நீர் மேலாண்மை ஆகியவற்றினைப் பற்றிய பொறுப்புணர்வை ஏற்படுத்த முயல்கிறது.

## சுறா மீன் தொகுதிகள் - அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள்

- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் ஒரு சுறா மீன் தொகுதியை உருவாக்க உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.
- இது பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

- இந்தப் பகுதிகள் ஆனது அதிகளவில் பயன்படுத்தப்படாத கடல் வளங்கள், குறிப்பாக சூரை மீன்கள் மற்றும் சூரை மீன் போன்ற உயர் மதிப்புள்ள இனங்களை அதிகளவில் கொண்டுள்ளது என்ற ஒரு நிலைமையில் இதன் அளவானது சுமார் 60,000 டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.





# சர்வதேசச் செய்திகள்

## உலகின் முதல் பசுமை ஆற்றல் தீவு

- வட கடலில், பெல்ஜியம் நாட்டின் பசுமை ஆற்றல் திட்டமானது நன்கு உருப்பெற்று வருகிறது.
- அந்த நாடு மாபெரும் உறுதியான கட்டமைப்புகளை கட்டமைத்து கடலுக்குள் நிலை நிறுத்தியுள்ள நிலையில் இது இந்த உலகின் இத்தகைய முதலாவது முயற்சிக்கு ஒரு அடித்தளமாக அமையும்.
- இதற்கு பெல்ஜியம் நாட்டின் இளவரசி எலிசபெத் அவர்களின் பெயரிடப் பட்டுள்ளது.
- இந்த "ஆற்றல் தீவு" திட்டம் ஆனது 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இந்த செயற்கைத் தீவு ஆனது கடற்கரையிலிருந்து சுமார் 45 கிலோமீட்டர் (28 மைல்) தொலைவில் அமைய உள்ளது.
- இது காற்றாலை ஆற்றல் உற்பத்தியின் மிகவும் பெரிய விரிவாக்கத்தை ஆதரிப்பதை


நோக்கமாகக் கொண்டுள்ளது.

- பெல்ஜியம் நாடானது எதிர்வரும் ஆண்டுகளில் 3.5 ஜிகாவாட் கடல் சார் காற்று ஆற்றல் திறனை நிறுவ திட்டமிட்டுள்ளது.


Figure 1: Proposed Belgian energy island and interconnectors

# பொருளாதாரச் செய்திகள்


## RRB வங்கிகளின் நான்காம் கட்ட ஒருங்கிணைப்பு




- வட்டார ஊரக வங்கிகளுக்கான (RRBs) நான்காவது சுற்று ஒருங்கிணைப்பை நிதித் துறை அமைச்சகம் தொடங்கியுள்ளது.

- ❖ பல்வேறு மாநிலங்களில் இயங்கி வருகின்ற 15 RRB வங்கிகள் ஒருங்கிணைக்கப்பட உள்ளன.
- ❖ 43 ஆக உள்ள அத்தகைய வங்கிகளின் எண்ணிக்கையானது தற்போது 28 ஆக குறைய வாய்ப்புள்ளது.
- ❖ இந்தப் பட்டியலில் அதிகபட்ச எண்ணிக்கையிலான (4) RRB வங்கிகளைக் கொண்ட ஆந்திரப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்கம் (தலா 3), மற்றும் பீகார், குஜராத், ஜம்மு & காஷ்மீர், கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா மற்றும் இராஜஸ்தான் (தலா 2) ஆகியவை அடங்கும்.
- ❖ 2004-05 ஆம் ஆண்டில் RRB வங்கிகளின் கட்டமைப்பு சார் ஒருங்கிணைப்பை மத்திய அரசு தொடங்கியது.
- ❖ இது 2020-21 ஆம் ஆண்டு வரையில் மேற்கொள்ளப்பட்ட மூன்று கட்ட ஒருங்கிணைப்பு மூலம் 196 ஆக இருந்த அவற்றின் எண்ணிக்கையானது 43 ஆகக் குறைக்கப்பட்டது.
- ❖ இந்த வங்கிகள் ஆனது 1976 ஆம் ஆண்டு RRB சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டன.
- ❖ கிராமப்புறங்களில் உள்ள சிறு விவசாயிகள், வேளாண் தொழிலாளர்கள் மற்றும் கை வினைஞர்களுக்கு கடன் மற்றும் பிற வசதிகளை வழங்குவதை இவை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## நேரடி வரி வருவாய்





- ❖ மொத்த வரி வருவாயில் நேரடி வரிகளின் பங்களிப்பு ஆனது கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 2023-24 ஆம் ஆண்டில் 56.72 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- ❖ இந்த உயர்வானது, இருபது ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 6.64 சதவீதமாக உயர்ந்த நேரடி வரி-GDP விகிதத்தில் மேலும் உறுதியாக உள்ளது.

- மொத்த நேரடி வரி வருவாயில் சுமார் 39 சதவீதப் பங்கினை மகாராஷ்டிரா கொண்டு உள்ளது (2024 ஆம் நிதியாண்டில் 7.6 லட்சம் கோடி ரூபாய்).
- அதைத் தொடர்ந்து கர்நாடக மாநிலமானது சுமார் 12 சதவீதப் பங்கையும் (2.34 லட்சம் கோடி ரூபாய்) டெல்லி 10.4 சதவீதப் பங்கையும் (2.03 லட்சம் கோடி ரூபாய்) கொண்டு உள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## LID-568 ஆதி கருந்துளை





- வானியலாளர்கள், LID-568 எனப் பெயரிடப்பட்ட ஒரு மிகவும் பெரிய கருந்துளையைக் கண்டறிந்துள்ளனர்.
- அதன் காலம் ஆனது, 13.8 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட, பேரண்டத்தின் இயக்கத்தினைத் தொடக்கிய பெரு வெடிப்பு நிகழ்வுக்குப் பிறகு சுமார் 1.5 பில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு இருக்கலாம் என்று குறிக்கப்படுகிறது.
- LID-568 ஆனது சூரியனை விட சுமார் 10 மில்லியன் மடங்கு அதிகமான நிறை கொண்டது என்பதால் சாகிட்டாரியஸ் A* என்ற கருந்துளையினை விட 2-1/2 மடங்கு அளவுடன் இருக்கலாம்.
- LID-568 ஆனது, கோட்பாட்டு எடிங்டன் வரம்பை விட 40 மடங்கு அதிகமான வேகத்தில் பொருட்களை விழுங்குவதன் மூலம் பெரிதாகிறது.
- இந்த வேகம் என்பது மிகப்பெரிய கருந்துளைகளின் பரிணாம வளர்ச்சியைப் பற்றிய தற்போதைய கோட்பாடுகளுக்கு சவால் விடுக்கிறது.
- எடிங்டன் வரம்பு என்பது கருந்துளைகள் அடையக் கூடிய அதிகபட்ச ஒளிர்வு மற்றும் பொருளை உறிஞ்சும் வேகத்தைக் குறிக்கிறது.

- LID-568 கொண்டிருப்பது போல இந்த வரம்பு மீறிய வேகமானது, மிக அதிக எடிங்டன் வரம்பிலான குவிதல் எனப்படும் ஒரு நிகழ்வைக் குறிக்கிறது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## ஏற்பு இடைவெளி அறிக்கை 2024

- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் (UNEP) 'Adaptation Gap Report 2024: Come hell and high water' என்ற அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டில் சுமார் 22 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த வளர்ந்து வரும் நாடுகளுக்கான சர்வதேசப் பொது ஏற்பு நிதி வழங்கல் ஆனது 2022 ஆம் ஆண்டில் 28 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்தது.
- இருப்பினும், கிளாஸ்கோ பருவநிலை ஒப்பந்த இலக்கை அடைவது என்பது ஏற்பு நிதி இடைவெளியை மட்டுமே குறைக்கும் என்ற நிலையில் இது ஆண்டிற்கு சுமார் 187-359 பில்லியன் டாலர் (சுமார் 5 சதவீதம்) என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2030 ஆம் ஆண்டு வரை வளர்ந்து வரும் நாடுகளுக்கான உண்மையான ஏற்பு நிதித் தேவைகள் ஆண்டிற்கு 387 பில்லியன் டாலர் ஆகும்.
- இந்தத் திட்டமிடலில் சுமார் 171 நாடுகளானது பாரீஸ் உடன்படிக்கையினை அடையச் செய்வதற்கான கொள்கை அல்லது உத்திசார் ஆவணம் போன்ற குறைந்தபட்சம் ஒரு தேசிய ஏற்புத் திட்டமிடல் செயற்கருவியினைக் கொண்டுள்ளன.
- அத்தகைய செயற்கருவி இல்லாத 26 நாடுகளில், 10 நாடுகள் ஆனது அத்தகைய செயல் திட்டங்களை உருவாக்குவதற்கான விருப்பத்தினைக் கூட வெளிப்படுத்தவில்லை.





## உலக நகரங்கள் அறிக்கை 2024

- சமீபத்தில், UN-வாழ்விட அமைப்பானது 'World Cities Report 2024: Cities and Climate Action' என்ற அறிக்கையினை வெளியிட்டது.

- 2040 ஆம் ஆண்டில், நகர்ப்புறங்களில் வசிக்கும் சுமார் இரண்டு பில்லியன் மக்கள் 0.5 டிகிரி வெப்பநிலை உயர்வை எதிர்கொள்வார்கள் என்று அந்த அறிக்கை கூறுகிறது.
- உலகெங்கிலும் உள்ள பல்வேறு நகரங்களுக்குப் பருவநிலை நெகிழ் திறன் கொண்ட அமைப்புகளை உருவாக்க மற்றும் பராமரிக்க ஆண்டிற்கு 4.5 முதல் 5.4 டிரில்லியன் டாலர் முதலீடு தேவைப்படும்.
- அதற்காக தற்போது வழங்கப்படும் நிதியுதவி வெறும் 831 பில்லியன் டாலர் மட்டுமே ஆகும்.
- 1990 ஆம் ஆண்டில் சுமார் 19.5 சதவீதமாக இருந்த உலகளவில் நகர்ப்புறங்களில் உள்ள பசுமை இடங்களின் சராசரிப் பங்கு ஆனது 2020 ஆம் ஆண்டில் 13.9 சதவீதமாகக் குறைந்தது.
- 2040 ஆம் ஆண்டில், சுமார் 2,000க்கும் அதிகமான நகரங்கள் கடல் மட்டத்திலிருந்து 5 மீட்டருக்கும் குறைவான உயர கடலோரப் பகுதிகளில் காணப்படும்.
- 1975 ஆம் ஆண்டு முதல் வெள்ளப் பாதிப்பு ஆனது கிராமப்புறங்களை விட நகரங்களில் 3.5 மடங்கு வேகமாக அதிகரித்துள்ளது.

Figure 3.11: Population in cities by region of the world experiencing warmer temperatures, 2025-2040, by RCP




# மாநிலச் செய்திகள்

## சதர் சம்மேளன் - மாநில விழா

- தெலுங்கானா மாநில அரசானது 'சதர் சம்மேளன்' விழாவினை தெலுங்கானா மாநில விழாவாக அறிவித்துள்ளது.
- சதர் திருவிழா என்பது தீபாவளிக்குப் பிறகு இரண்டு நாட்கள் நடைபெறும் வருடாந்திர விழாவாகும்.
- பெருமை மற்றும் பக்தியை வெளிப்படுத்தும் வகையில் அலங்கரிக்கப்பட்ட எருமை மாடுகள் ஆனது தெருக்களில் ஊர்வலமாக கொண்டு செல்லப்படும் ஒரு நிகழ்வானது இந்தத் திருவிழாவில் இடம் பெற்றுள்ளது.

- இது ஹைதராபாத்தின் யாதவர் சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்படுகிறது.




# முக்கிய தினங்கள்

## தேசியப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம் - நவம்பர் 07




- புற்றுநோயைத் தடுத்தல், அதைக் கண்டறிதல் மற்றும் அதற்கு சிகிச்சை அளித்தல் குறித்தப் பொது விழிப்புணர்வை ஏற்படுத்துவது இந்த நாளின் மையக் கருத்தாகும்.
- 1867 ஆம் ஆண்டு இதே நாளில் தான், புகழ்பெற்ற போலந்து-பிரெஞ்சு இயற்பியலாளர் மேரி கியூரி பிறந்தார்.
- 2022 ஆம் ஆண்டில் இந்தியாவில் சுமார் 14.1 லட்சத்துக்கும் அதிகமான புதிய புற்று நோய்ப் பாதிப்புகள் மற்றும் 9.1 லட்சத்துக்கும் அதிகமான உயிரிழப்புகள் பதிவாகின.
- பெண்களுக்கு ஏற்படுகின்ற மிகவும் பொதுவான வீரியமிக்க புற்றுநோய்கள் மார்பகம் மற்றும் கருப்பை வாய் ஆகியனவாகும் என்ற நிலையில் புதிய பாதிப்புகளில் இவை

முறையே 27% மற்றும் 18% பங்கினை கொண்டுள்ளன.

- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, " Hope, love, and strength: our weapons against cancer!" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## சியா-சியா பழங்குடியினர்

- சியா-சியா பழங்குடியினர் இந்தோனேசியாவின் புடோன் தீவில் உள்ள பழங்குடியினச் சமூகம் ஆகும்.
- அவர்களின் மக்கள் தொகை சுமார் 93,000 ஆகும்.
- சியா-சியா மொழி முறையான எழுத்துமுறை இல்லாமல் பல நூற்றாண்டுகளாக வாய் மொழியாக இருந்து வருகிறது.
- தற்போது, அவர்களின் பூர்வீக மொழியை ஆவணப்படுத்தவும் அதனிப் பாதுகாக்கவும், கொரிய எழுத்துக்களான ஹங்குலை பயன்படுத்தி அவை படியெடுக்கப் படுகின்றன.
- இந்தோனேசியாவானது எண்ணற்றப் பழங்குடியினர் மற்றும் கலாச்சாரங்கள் மற்றும் 700க்கும் மேற்பட்ட பழங்குடியின மொழிகளின் தாயகமாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★